

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 14.08.2026


# கொடூர ஆட்சிக்கு கோவையே சாட்சி!

போதைப் பொருள் வைத்திருப்பது யார் என்று சொல்கிறான் அந்த மாணவன். இதைத் தெரிந்துகொண்ட போதைப் பொருள் கும்பல் அந்த மாணவனையே கொடூரமாக அடித்தே கொல்கிறது. 'இது மாணவர்களுக்குள் நடந்த கோஷ்டி மோதல்' என்று சட்டமன்றத்திலேயே மறைக்கிறார் அமைச்சர். இது கொடூரமான ஆட்சி என்பதற்குக் கோவையே சாட்சியாக அமைந்துள்ளது.

போதையில்லாத தமிழ்நாட்டை உருவாக்கப் போவதாகச் சொன்னார் முதலமைச்சர் விஜய். அவர் செல்பி எடுப்பதற்கும் ரீல்ஸ் போடுவதற்கும்தான் அரசு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. 'போதைப் பொருள்கள் இல்லாத தமிழ்நாடு' என்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியை மாநிலக் கல்லூரியில் நடத்தியது த.வெ.க. அரசு. அதில் போதை மற்றும் புகையிலை இல்லாத வளாகம்' என்ற விழிப்புணர்வுப் பரப்புரையைத் தொடங்கி வைத்துள்ளார் முதலமைச்சர் விஜய். பறிமுதல் செய்யப்பட்ட போதைப் பொருட்கள் அழிப்பு நடவடிக்கையை காணொலி மூலமாகப் பார்வையிட்டார். போதைப் பொருளை ஒழிப்பதில் சிறப்பாகப் பணியாற்றிய காவல் அதிகாரிகளுக்குப் பதக்கங்களை வழங்கினார். மாணவர்கள் போதை ஒழிப்பு உறுதிமொழி எடுக்க வைக்கப்பட்டார்கள். போதைப் பொருட்களை முழுமையாக ஒழித்து விட்டதைப் போல த.வெ.க. அரசு மார் தட்டிக் கொண்டது.

**அந்த நிகழ்ச்சிக்கு ஒரு காவல் துறை அதிகாரி தனது குழந்தையை போலீஸ் உடை அணிந்து அழைத்து வந்திருந்தார். அந்தக் குழந்தையை முதலமைச்சர் விஜய் தூக்கிக் கொஞ்சினார். அதுதான் மீடியாக்களில் பெரிதாக வர வழைக்கப்பட்டது. நிகழ்ச்சியையே அந்த ரீல்ஸ் எடுக்கத் தான் நடத்தி இருக்கிறார்கள். ஆனால் ரியல் காட்சிகள் என்ன?**

**போதைக் கும்பலில் இருப்பவர்கள் பெயரைச் சொன்ன காரணத்துக்காக உடனிருக்கும் மாணவர்களால் அடித்தே கொல்லப்பட்டுள்ளான் ஒரு மாணவன்.**

கோவை பொள்ளாச்சி சாலை பிரிமியர் மில் அருகே இந்துஸ்தான் பொறியியல் கல்லூரியில் மூன்றாம் ஆண்டு பயின்று வந்த மாணவர் அமுதன், பத்துக்கும் மேற்பட்ட நபர்கள் கொண்ட கும்பலால் சரமாரியாகத் தாக்கப்பட்டு மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லும் வழியிலேயே உயிரிழந்தார். விடுதியில் நடந்த போதைப்பொருள் புழக்கம் குறித்த தகவல்களை நிர்வாகத்திடம் அமுதன் கூறியதால் ஆத்திரமடைந்த சக மாணவர்கள் இத்தாக்குதலில் ஈடுபட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

மாணவனைக் கடத்திக் கத்தியால் குத்தியும், இரும்பு ராடால் அடித்தும் கொலை செய்துள்ளது அந்தக் கும்பல். போதைப் பொருட்கள் விற்பனை குறித்து கல்லூரி நிர்வாகத்திடம் அமுதன் தெரிவித்ததால் கொலை செய்யப்பட்டதாக அமுதனின் பெற்றோர் சொல்லி இருக்கிறார்கள். மாணவர் அமுதன் உயிரிழப்புக்கான காரணத்தை மூடி மறைக்க முயற்சி நடைபெறுவதாக உறவினர்கள் குற்றஞ்சாட்டி உள்ளனர்.

**அமுதனின் தந்தை கென்னடி, அரசுப்பள்ளித் தலைமையாசிரியராக உள்ளார். "சில நாட்களுக்கு முன்பு, விடுதியில் சமையல் பணி செய்யும் பணியாளர்கள் சிலர் போதைப் பொருள் பயன்படுத்துவதை எனது மகனும், அவனுடைய நண்பனும் பார்த்திருக்கிறார்கள். அப்போது அவர்களிடையே மோதல் ஏற்பட்டுள்ளது. அதுபற்றி என் மகனை கல்லூரியில் விசாரித்துள்ளனர். போதைப் பொருள் பயன்படுத்திய தொழிலாளர்கள்மீது நடவடிக்கை எடுக்காமல், என் மகனை விடுதியை விட்டு வெளியேற்றினர். கால அவகாசம் கேட்டதற்குத் தரவில்லை. கல்லூரியில் கஞ்சா பயன்படுத்தும் மாணவர்களைப் பற்றி என் மகனிடம் தகவல் கேட்டு எழுதி வாங்கியுள்ளனர். அதை அந்த மாணவர்களிடம் அவர்கள் சொன்னதால்தான் கோபத்தில் என் மகனை 20 பேர் சேர்ந்து கொடூரமாகத் தாக்கிக் கொலை செய்துள்ளனர்" என்று அமுதனின் தந்தை கென்னடி சொல்கிறார்.**

அமுதனின் தாயார் சுமதி, **"என் மகன் மருந்து குடித்து விட்டான். தற்கொலை செய்து கொண்டான் என்று தகவல் சொல்லித்தான் எங்களை வரவழைத்தார்கள். இங்கே வந்து பார்த்தபோதுதான், என் மகனை அடித்துக் கொலை செய்திருக்கிறார்கள் என்று தெரியவந்தது"** என்று கூறி கதறியழுதார்.

அமுதனின் உறவினர் பாலகுரு, **"போதைப்பொருள் பற்றி அமுதன் தகவல் கொடுத்ததால் ஏற்பட்ட பகையில்தான் அவனைக் கொலை செய்துள்ளனர்"** என்கிறார். போதை மருந்துக் கலாச்சாரம் எந்தளவுக்குப் போயிருக்கிறது என்பதற்கு இது ஒரு உதாரணம் ஆகும்.

கோவை கொலைச் சம்பவம் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி சட்டசபையில் எழுப்பிய கேள்விக்கு காவல்துறையைக் கையில் வைத்து இருக்கும் முதலமைச்சர் விஜய் பதிலளிக்கவில்லை. அவர் பதிலளிக்காமல் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் ராஜ்மோகன் பதில் சொல்லி இருக்கிறார். 'கோஷ்டி மோதல் தான் காரணம்' என்று சொல்லி இருக்கிறார் அமைச்சர் ராஜ்மோகன். அப்படியானால் கொல்லப்பட்ட மாணவனின் பெற்றோர் பொய் சொல்கிறார்களா?

'உங்கள் பையன் தற்கொலை செய்துகொண்டான்' என்று சொல்லித் தான் அந்தப் பெற்றோரை வரவைத்துள்ளது நிர்வாகம். ஆனால் மாணவன் அடித்துக் கொல்லப்பட்டுள்ளான். இந்தப் பொய்க்கு பின்னால் இருக்கும் பொய்ச்சதிகள் என்ன? அடுத்த பெரிய பொய்யை அமைச்சரே ஏன் சொல்ல வேண்டும்? போதை நடமாட்டத்தை மறைத்து, ஒரு கொலையையும் மறைப்பதுதான் விஜய் கொடுக்கும் மாற்றமா?

கோவையில், போதைப்பொருள் விற்பனைக் கும்பலால் கல்லூரி மாணவர் படுகொலை செய்யப்பட்டதற்கு அரசு பொறுப்பேற்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார். பொறுப் பேற்க மறுக்கும் த.வெ.க. ஆட்சி அந்த கொலையையே மறைப்பது படுமோசமானது.

**கல்லூரியில் புழங்கும் போதைப்பொருள் கலாச்சாரத்தைத் தடுக்க முயன்ற மாணவனின் உயிரைக் காப்பாற்றத் தவறியுள்ளார் முதலமைச்சர் விஜய். தமிழ்நாட்டில் போதைப் பொருள் புழக்கம் எந்த அளவிற்குப் பெருகியுள்ளது என்பதற்கு கோவை மாணவனின் கொலைச் சம்பவமே சாட்சி. எந்த முகத்தை வைத்துக் கொண்டு போதைக்கு எதிரான விழிப்புணர்வு உறுதிமொழி எடுக்கிறார் முதலமைச்சர் விஜய்?**

**தூய சக்தி ஆட்சியில் போதை சக்திகளின் நடமாட்டம்.**

**போதை சக்திகளின் கொலையை தூயசக்தியே மறைக்கும் திருட்டு ஆட்டம்!**

## பொதுப் பணித்துறை அமைச்சர் சம்பந்தா சம்பந்தமில்லாமல் பேசுவதா?

# தொழிலதிபர்கள் வங்கிகள் மூலமாகவே நன்கொடை கொடுக்கிறார்கள்!

## சட்டப்பேரவையில் - கழக கொறடா எ.வ.வேலு பேச்சு!

சென்னை, ஆக. 14 – சட்டப் பேரவையில் அமைச்சர்கள், உறுப்பினர்கள் பேச்சுக்கு இடையே குறுக்கிட்டு கழக கொறடா எ.வ.வேலு பேசிய பேச்சுக்களின் தொகுப்பு வருமாறு:-

அவை முன்னவர் அவர்கள் ஒரு பெரிய, தெளிவான கண்டுபிடிப்பைச் சொல்லியிருக்கிறார்கள். அவர் ஏற்கெனவே சட்டமன்ற உறுப்பினராக நீண்ட நெடிய காலம் இருந்த அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில்கூட இவையெல்லாம் நடைபெற்றது. இதில் தி.மு.க., அ.தி.மு.க. என்று ஒன்றும் கிடையாது.

இன்னும் சொல்லப்போனால் நான் ஒரு சிறிய விளக்கத்தைச் சொல்கிறேன். Time ஆகிறதே என்று எடுத்துக்கொள்ளாதீர்கள். காங்கிரஸ் பேரியக்கம் ஆண்டுகொண்டிருந்தபொழுது, திரு. நேரு அவர்கள், ஒரு Committeeயை எல்லா மாநிலத்திற்கும் அனுப்பினார்கள், சாராயக் கடையெல்லாம் திறக்கக் கூடாது என்று.

அப்போது தமிழ்நாட்டில் காங்கிரஸ் இயக்கம் என்ன சொன்னது தெரியுமா? திருட்டுச் சாராயம் காவிரி ஆறு போல் ஓடுகிறது. அதைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று சொன்னால், அதற்கு சாராயக் கடை இருக்க வேண்டும் என்று சொன்னார்கள்.

அது தவறான விஷயம் அல்ல, திருட்டுச் சாராயம் சாப்பிட்டால் உடம்பெல்லாம் கெட்டு hospital அதிகமாகச் சென்று செத்துவிடுவான் என்ற அடிப்படையில்தான் அந்தக் கருத்து சொல்லப்படுகிறது. வேண்டுமென்றே சொல்லப்பட்ட கருத்து அல்ல.

Enforcement Directorateல் எந்தச் செய்திகள் கிடைத்தாலும் அது 100 சதவிகிதம் உண்மையல்ல. Enforcement Directorate என்பது ஒரு வகையான police தான். ஒரு துறை சார்பாக வழக்கு தொடுத்து நீதிமன்றத்தில் இருக்கிறது. நீதிமன்றத்தில் இருக்கிற வழக்கைப் பொறுத்தவரையில், அது எந்த side ஆக இருந்தாலும், அந்தப் பொருள் குறித்து சட்டமன்றத்தில் விவாதிக்கக்கூடாது என்பது விதி. அது உங்களுக்கே தெரியும். எந்த நிகழ்வாக இருந்தாலும், நீதிமன்றத்தில் இருந்தால் அதை விவாதிக்க முடியாது.

Enforcement சார்பாக ஒரு வழக்கு இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருந்தால் அதைப்பற்றி நான் முறையிடமாட்டேன். அதில் ஆதாரம் இருக்கிறது, enforcementல் ஆதாரம் இருக்கிறது என்ற ஒரு வார்த்தையைப் பயன்படுத்தியதால்தான் நான் முறையிடுகிறேன்.

அதனால் பொதுவாக வழக்காடு மன்றத்தில் இருக்கிற பொருள் குறித்து நாம் எப்போதும் விவாதிப்பதில்லை என்பது ஒன்று. மற்றொன்று நான் ஏற்கெனவே சொல்லிவிட்டேன். எதுவாக இருந்தாலும் ஆதாரத்தை உங்களிடம் கொடுத்துவிட்டுதான் பேசவேண்டும்.

நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், சம்பந்தா சம்பந்தமில்லாமல் தேர்தல் நேரங்களில், தொழில்



ஆரம்பிக்கும் தொழிலதிபர்கள் அரசியல் கட்சிக்கு—இன்றைக்கு ஒன்றிய அரசாங்கம் ஆட்சி செய்து கொண்டிருக்கிற அந்த இயக்கமாக இருக்கட்டும் அல்லது அஇஅதிமுகஆக இருக்கட்டும், எந்த அரசியல் இயக்கங்களாக இருந்தாலும் தொழிலதிபர்கள் அதிகாரபூர்வமாக வங்கிகள் மூலமாக நன்கொடையாகத் தருகிறார்கள். அது எதற்காக நன்கொடை கொடுக்கிறார்கள் என்பது வாங்குகிறவர்களுக்கும், கொடுக்கிறவர்களுக்கும்தான் தெரியும்.

நன்கொடை கணக்கில் கொடுக்கிற பணம் தொழிலதிபர்கள் கொடுப்பது. அந்த அடிப்படையில்தான் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள் என்றால், ஏன் அவர் கொடுத்தார் என்று கேட்பதுதான் சரியாக இருக்குமே யொழிய, அதனை இங்கே பகிர்ந்துகொள்வது சரியாக இருக்காது. அதை இங்கே தவிர்த்துவிட வேண்டும். அதை நீக்கிவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்றொன்று எங்களுடைய கட்சியைச் சார்ந்த பொருளாளர் அவர்கள் சாராயத் தொழிற்சாலை நடத்துகிறார் என்று ஒரு கேள்வி கேட்கிறார்கள். நாம் நேரடியாக சென்று தொழிற்சாலையை ஆரம்பிக்க முடியாது. எந்த ஆட்சியாக இருந்தாலும் சரி, ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்க வேண்டுமென்று சொன்னால் அதற்கு தகுதிகள், qualifications, applications போடுவதற்கு எல்லாம் தகுதியிருந்தால்தான், அதனை பரிசீலித்து அரசுதான் licence தருகிறது. அதனால் அவர்கள் முறையாக அதனைச் செய்திருப்பார்கள். தொழில் என்ற அடிப்படையில் ஆரம்பித்தார்களேயொழிய, திமுக பொருளாளரால் ஆரம்பிக்கலாமா என்று எல்லாம் பேசுவதற்கு வாய்ப்பில்லை. அது தவறு.

நீங்கள் நடுநிலையோடு எப்போதும் தீர்ப்பு வழங்குவீர்கள். அதில் மாற்றுக்கருத்து இல்லை. பொதுவாக அரசியலில் இருப்பவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் என்று யாராக இருந்தாலும் சரி, வெளியிலே பொதுக்கூட்டங்களில் பேசுகிறபோது உணர்ச்சி வசப்பட்டு சில வார்த்தைகளை—பல்வேறு இயக்கத்தை சார்ந்தவர்கள் அவ்வாறு செய்துள்ளனர்.

அதுசம்பந்தமாக காவல் துறையின் சார்பாக வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, நீதிமன்றத்திற்கு சென்று சரியா, தவறா அல்லது தவறு என்று சொன்னால் அதற்கு நீதிமன்றம் தண்டனை வழங்குகிறது.

அதேநேரத்திலே, இங்கே சட்டமன்றத்திலே ஏதாவது தவறாக பேசியிருந்து, அவையிலுள்ள உறுப்பினர்களை மனம் புண்படுகிற அளவிற்கு பேசுகிறபோதுதான், பேரவைத் தலைவர் அவர்கள், அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பி, உரிமைக் குழுவில் என்ன முடிவெடுக்கிறார்களோ, அதை நீங்கள் தீர்ப்பாக வழங்குகிற வாய்ப்புதான் இதுவரை இருந்திருக்கிறது. ஒரே பிரச்சினைக்கு இரண்டு இடங்களில் வழக்கு பதிவு செய்வது என்பது, இரண்டு இடங்களில் தண்டனை வழங்குவது என்பது காலங்காலமாக இல்லாத ஒன்று.

நம்முடைய உறுப்பினர் மார்க்கண்டேயன் அவர்களை பொறுத்தளவிற்கு வெளியிலே பொதுக்கூட்டத்திலே பேசியிருக்கிறார். அதுசம்பந்தமாக தமிழ்நாடு காவல் துறை அவர்மீது வழக்கு பதிவு செய்து, ஏறத்தாழ 16 நாட்கள் நீதிமன்றக் காவலிலே இருந்திருக்கிறார். வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. வழக்கில் என்ன தீர்ப்பு வரப்போகிறதோ அதை அவர் அனுபவிக்க போகிறார். ஆனால் அதுசம்பந்தமாக நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் தலைமையிலே இருக்கிற இந்தப் பேரவையிலே, அதுசம்பந்தமாக நாம் ஆய்வு செய்வது என்பதோ, அதுகுறித்து நாம் கருத்துகளை வெளிப்படுத்துவது என்பது இதுவரையில் இல்லாத ஒன்று. அதனால் நீங்கள் அதனை பரிசீலனை செய்ய வேண்டும்.

இவ்வாறு கழக கொறடா எ.வ.வேலு அமைச்சர்கள், உறுப்பினர்கள் பேசுகையில் குறுக்கிட்டு பேசினார்.

# 'டப்பிங் மாடல்' ஆட்சியைக் கண்டு தமிழ்நாடே சிரிக்கிறது!

## சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு விமர்சனம்!

சென்னை, ஆக.14- சட்டப் பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாபு, தனது சமூக வலைதளத்தில் விடுத்துள்ள பதிவு வருமாறு:

நடந்து முடிந்த சட்டமன்ற நிகழ்வுகளைப் பார்த்த எனக்கு நினைவுக்கு வருகிறது கலைஞரின் வரிகள்: சிந்திக்க இயலாதவன் அறிவிலி, சிந்திக்க விரும்பாதவன் சோம்பேறி, சிந்திக்க அஞ்சுபவன் கோழை, சிந்தித்து செயல்படுபவனே பகுத்தறிவாளன். கடந்த ஐந்தாண்டு காலம் சிந்தித்து செயல்பட்டு, தமிழர்களின் உரிமையையும் தமிழகத்தையும் ஒன்றிய அரசின் எதிர்ப்பையும் தாண்டி

பாதுகாத்து, எல்லாத் துறைகளிலும் தமிழ்நாட்டை முதன்மை இடத்திற்குக் கொண்டு வந்தவர் முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலின்.

கடந்த 34 ஆண்டுகள் பெரும்பாலும் பிறமொழிப் படங்களை டப்பிங் செய்து



நடிகராக இருந்தது போல், ஆட்சியிலும் முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சட்டமன்றத்தில் கொண்டு வந்து நிறைவேற்றிய தீர்மானங்களான காவிரி, மேகதாது, நீட், தொகுதி மறு வரையறை, FCRA உள்ளிட்ட தீர்மானங்களை டப்பிங் செய்து, தான் சிந்தித்து செயல்படுத்தியது போல் "டப்பிங் மாடல் ஆட்சி" செய்து வரும் நீங்கள் "கோழை" என்பதை தமிழ்நாடே சிரிக்கிறது CM sir ?

நடந்து முடிந்த சட்டமன்ற கூட்டத்தொடர் முழுவதும் கலைஞர் போல் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சட்டமன்ற கதாநாயகனாக தேர்ந்தெடுக்கப்பட்டு "சின்ன கலைஞர்" என்று தமிழ்நாட்டு மக்களே பாராட்டி வருகின்றனர்.

தொகுதி மறு வரையறை தீர்மானத்தில் பேசிய ஆதவ் அர்ஜூனா, அடுத்த பிரதமர் தமிழ்நாட்டில் இருந்து தான் வருவார் என்று சொன்னதும் "விஜய்" கள்ளச் சிரிப்புடன் சட்டமன்றத்தில் அமர்ந்து ரசித்தார். அப்போது த.வெ.க உறுப்பினர்களும், காங்கிரஸ் அமைச்சர்கள், உறுப்பினர்கள் மேஜையை தட்டி வரவேற்றது காங்கிரசுக்கும், ராகுல் காந்திக்கும் செய்யும் துரோகம் இல்லையா CM sir ?

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## ஒன்றிய பா.ஜ.க. அரசு அறிமுகப்படுத்தியுள்ள

# கனிம வளங்கள் திருத்த மசோதா - அரசியலமைப்பு உறுதி செய்யும் கூட்டாட்சித் தத்துவத்தின் மீது நேரடித் தாக்குதல்!

## முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு கண்டனம்!



சென்னை, ஆக.14 மக்களவையில் ஒன்றிய பா.ஜ.க. அரசு அறிமுகப்படுத்தியுள்ள கனிம வளங்கள் (மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை) திருத்த மசோதா 2026, அரசியலமைப்பு உறுதி செய்யும் நிதிக் கூட்டாட்சி தத்துவத்தின் மீதான நேரடித் தாக்குதலாகும் என்று முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

ஒரு மாநிலம் கொண்டிருக்கும் கனிம வளங்கள் மூலம் எவ்வித வரி வரி வருவாயும் அந்த மாநிலம் ஈட்ட முடியாத வகையில் திருத்தம் மேற்கொள்ளபட்டுள்ள இந்த மசோதாவானது, கடந்த 2024-ஆம் ஆண்டு ஜூலையில் உச்ச நீதிமன்றத்தின் ஒன்பது நீதிபதிகள் அடங்கிய அரசியலமைப்பு அமர்வு, பட்டியல் IIன் 50வது பிரிவின் கீழ், ஒன்றிய அரசு நிர்ணயிக்கும் ராயல்டியிலிருந்து தனித்து, கனிம வளங்கள் மற்றும் கனிமம் நிறைந்த நிலங்கள் மீது வரி விதிக்கும் அதிகாரம் மாநிலங்களுக்கு உண்டு என்று தெளிவாக உறுதி செய்த தீர்ப்பை மறுக்கிறது.

வருவாய் ஈட்டும் அதிகாரத்தை மாநிலங்களிடமிருந்து பறிக்கும் வகையில் இந்த சட்ட மசோதா கொண்டுவரப்பட்டுள்ளது. இந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்தால், தமிழ்நாடு சுமார் ரூ.3,200 கோடி வருவாயை இழக்கும் அபாயம் உள்ளது. அந்த வருவாய் மாநிலத்தின் வளர்ச்சித் திட்டங்களுக்கும் மக்கள் நலப் பணிகளுக்கும் பயன்படுத்தப்பட வேண்டியதாகும்.

மாநிலங்களின் இயற்கை வளங்களை மாநிலங்களே நிர்வகித்து, அதிலிருந்து கிடைக்கும் வருவாயை அந்தந்த மாநிலங்களே பயன்படுத்தும் உரிமையைப் பறித்து, அதிகாரத்தை ஒன்றியத்தில் குவிப்பது கூட்டாட்சியின் அடித்தளத்தையே பலவீனப்படுத்தும்.

சீர்திருத்தம் என்ற பெயரில் மாநிலங்களின் நிதி உரிமையைப் பறிப்பதை ஒரு போதும் நாம் ஏற்க முடியாது. தமிழ்நாட்டின் உரிமையையும், வருவாய் ஆதாரத்தையும் பாதிக்கும் இந்த மசோதாவை எதிர்த்து, மாநிலங்களின் நிதி சுயாட்சி மேலும் பறிபோகாமல் நாம் பாதுகாக்க வேண்டும்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# விடுதலை திருநாள் விழா!

# தி.மு.க. தலைமைக் கழகம் அண்ணா அறிவாலயத்தில்

## 15-8-2026 அன்று காலை சரியாக 8.00 மணிக்கு தேசியக் கொடி ஏற்றப்படுகிறது

வருகிற 15-8-2026 சனிக்கிழமை இந்திய நாட்டின் விடுதலை திருநாளினையொட்டி, கடந்த ஆண்டுகளைப் போலவே, இந்த ஆண்டும் தி.மு.க. தலைமைக் கழகமான அண்ணா அறிவாலயத்தில் காலை சரியாக 8.00 மணிக்கு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, தேசியக் கொடி ஏற்றி வைக்கிறார்.

சென்னை வடக்கு - சென்னை வடகிழக்கு - சென்னை கிழக்கு - சென்னை மேற்கு - சென்னை தென்மேற்கு - சென்னை தெற்கு ஆகிய மாவட்டக் கழகங்களைச் சார்ந்த நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

நாள்- 13.08.2026

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.